" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2012-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27-ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் : " தக்கார் தகவுஇலர் என்பது அவர்அவர்
எச்சத்தால் காணப் படும் "**

**பொருள் : இவர் நேர்மையுடையவர் அல்லது இல்லாதவர் என்ற
உண்மை, அவரவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ்,
பொருள், பழி, (மரபு) வழியால் அறியப்படும்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) சி.டபுள்யு.2/40475/2011**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி **23.04.2012** மற்றும் **08.08.2012** ஆகிய தேதிகளில் நடைபெற்ற சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.252**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2) B11/38989/2011**

மதுரை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால், பேரூராட்சிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்கம் அலுவலக ந.க.எண்.15753/பே.ஒ.வ.(3)/2011, நாள் :12.12.2011-ன்படி பணியாளர்களின் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் டிசம்பர் 2011 மாதம் முதல் அந்தந்த மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க

தெரிவிக்கப்பட்டதின் பேரில் திருநகர், ஹார்விபட்டி, விளாங்குடி பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்று காலஞ்சென்ற ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர் 31 நபர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் 1 மாதத்திற்கு உத்தேச செலவு ரூ.1,63,775/-ஐ ஆணையாளர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 22.12.2011 மற்றும் 16.07.2012–ந் தேதிய முன் ஒப்புதல் பெற்று தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்டவாறு வழங்கியதை மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.253</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**3) <u>ம.பொ. 3/ம.எண். 806 / 12-13</u>**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட உள்வட்டச் சுற்றுச் சாலையில் உள்ள டோல்கேட் எண்.2 முதல் 5 வரையுள்ள சாலைகளில் தடுப்புச்சுவர் அமைத்து சாலைகளை அகலப்படுத்தி தார் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகளின் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| *1* | *2* | *3* |
| **1.** | **ம.பொ. 4/ம.எண்.** 802/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 2ல் கிழக்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | **80.64** |
| **2.** | **ம.பொ. 4/ம.எண்.** 803/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 2ல் மேற்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | **80.64** |
| **3.** | **ம.பொ. 3/ம.எண்.** 806/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 3ல் கிழக்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | **82.74** |
| **4.** | **ம.பொ. 3/ம.எண்.** 807/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 3ல் மேற்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | **82.74** |
| **5.** | **ம.பொ. 3/ம.எண்.** 808/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 4ல் கிழக்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | **80.64** |
| **6.** | **ம.பொ. 3/ம.எண்.** 809/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 4ல் மேற்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | **80.64** |
| **7.** | **ம.பொ. 4/ம.எண்.** 452/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 5ல் வடக்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | **97.90** |
| **8.** | **ம.பொ. 4/ம.எண்.** 451/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 5ல் தெற்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | **97.90** |
| **9.** | **ம.பொ. 4/ம.எண்.** 872/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 1ல் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | **90.00** |

மேற்படி மதிப்பீட்டு பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.254</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**4) <u>மச1/ 19873 /2010</u>**

மதுரை மாநகரட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை மாவட்ட நீதிமன்ற அமர்வில் தொடரப்பட்டுள்ள வழக்குகளில் மாநகராட்சி சார்பில் விசாரணைக்கு ஆஜராகவும், வாதிடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும், தக்க சட்ட ஆலோசனைகளை வழங்கவும், மாமன்றாத் தீர்மானம் எண்: 365 நாள் : 31.01.2007 ன் படி (மநி1/ 33938/2005) மாநகராட்சி வழக்கறிஞராக பணியாற்றி வந்த திரு.எம்.ஜோதிபாசு, திரு.எம்.ரவிசங்கர், திரு.எம்.ஜீவானந்தம், திரு.எம்.சேது பழனிச்சாமி, மற்றும் திரு.எஸ்.மாணிக்கவாசகம் வழக்கறிஞர்கள் மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து வருபவர்களை அப்பணியிலிருந்து ஒப்பந்தம்படி விடுவிக்க

மாமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. மேலும் மதுரை மாநகராட்சிக்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் 100 வார்டுகளுக்கு புதிதாக கூடுதல் வழக்கறிஞர்கள் நியமனம் செய்ய வேண்டியுள்ளது.

இந்நிலையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 03.11.2011-ன் கடிதத்தின்படி வழக்கறிஞர் திரு.ஜீ.ஆர்.சுவாமிநாதன் B.A.B.L., சென்னை உயர்நீதி மாமன்றத்திற்கு மாநகராட்சி மத்திய அலுவலகத்திற்கும், மண்டலம் – 1க்கு திரு.ஆர்.முரளி, திரு.சி.கண்ணன் வழக்கறிஞரும், மண்டலம் – 2க்கு திரு.ஜே.குணசீலன் முத்தையா, திரு.பிரபு ராமச்சந்திரன் வழக்கறிஞர்களும், மண்டலம் – 3க்கு திரு.என்.சண்முக செல்வம், திரு.பி.அசோக் வழக்கறிஞர்களும், மண்டலம் – 4க்கு திரு.எம்.கே.சேகர், திரு.பாலரத்தின குமார் வழக்கறிஞர்களும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களாக நியமிக்கவும், மதுரை மாவட்ட நீதிமன்றத்திற்கு மண்டலம்–1க்கு திரு.எஸ்.ஜீவானந்தம், மண்டலம் – 2க்கு திரு.கே.சந்திரசேகர், மண்டலம் – 3க்கு திரு.ஆர்.சந்திரசேகர், மண்டலம் – 4க்கு திரு.கே.எஸ்.சிவக்குமார், மத்திய அலுவலகத்திற்கு திரு.பி.முத்துக்குமார், மற்றும் திரு.சேது ஜனகர் வழக்கறிஞர்களும், மாவட்ட குற்றவியல் வழக்குகளுக்கு திரு.எம்.சந்திரன் வழக்கறிஞரும், மேற்படி வழக்கறிஞர்களின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று அன்னார்களை மதுரை மாநகராட்சி உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களாகவும், மாவட்ட வழக்கறிஞர்களாகவும் பணியமர்த்தியதற்கும் மாமன்றத்தின் பின்னேற்பு கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.255**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 27.09.2012**

# மதுரை மாநகராட்சி
# மாமன்றக் கூட்டம்
# Table Agenda

**1 ) ம.வ.2/ 22321/12**

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையின் வாயிற்பகுதியில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் பூங்காவினை மாநகராட்சி வளாகத்தினுள் செயல்படும் கனரா வங்கிக்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று பராமரிப்பதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது மாநகராட்சி பகுதியில் உள்ள முக்கிய பூங்காக்களை பராமரிப்பு செய்ய கீழக்கண்ட வங்கிகள் மற்றும் மருத்துவமனைகள் தானாக முன் வந்துள்ளதால் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட பூங்காக்களை பராமரிக்க நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம்.

| வ. எண். | பூங்காவின் பெயர் | பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டிய வங்கி மற்றும் மருத்துவமனையின் பெயர் |
|---|---|---|
| *1* | *2* | *3* |
| 1. | மீனாட்சி பூங்கா | AXIS வங்கி |
| 2. | துளசிராம் பூங்கா | சிட்டி யூனியன் வங்கி |
| 3. | மேலவாசல் கோட்டை பூங்கா (பழைய தெற்கு மண்டல அலுவலகம்) | HDFC வங்கி |
| 4. | இராஜாஜி பூங்கா | ICICI வங்கி |
| 5. | A.R.மருத்துவமனை அருகில் உள்ள கே.கே.நகர் பூங்கா | A.R.மருத்துவமனை |

மேற்கண்டவாறு மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களை பராமரிக்க சம்பந்தப்பட்ட வங்கிகள் மற்றும் மருத்துவமனைக்கு அனுமதி வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.256**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2) சிடபுள்யூ .1/026068/12**

2012 அக்டோபர் 19 –20 ஆகிய தேதிகளில் கொரிய குடியரசு நாட்டில் சியோல் நகரத்தில் நடைபெற இருக்கும் General Meeting of the World Mayors Council on Climate Change of the Opening of the “ ICLEI East Asian Secretariat’’ கருத்தரங்கில் மதுரை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் ஆணையாளர் மற்றும் நகரப்பொறியாளர்(பொறுப்பு) ஆகியோர் கலந்து கொள்ளவும், அதற்கான ஒப்புதலை அரசிடம் பெறுவதற்கு ஏதுவாக மதுரை மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் அனுப்பிவைக்க கோரி வரப்பெற்றுள்ள சென்னை சேப்பாக்கம் நகராட்சி நிர்வாக ஆணையரின் 39071/2012/MCA2, எண்.24.09.2012-ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு, ஷை கருத்தரங்கில் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் நகரப்பொறியாளர்(பொறுப்பு) ஆகியோர் விருப்பம் தெரிவித்ததின் பேரில், ஷை கருத்தரங்கில் கலந்து கொள்ள அரசு அனுமதிக்கும் பட்சத்தில் மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் நகரப்பொறியாளர்(பொறுப்பு) ஆகியோர் ஷை கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கும் அதற்கான செலவுகளை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு : மேற்கண்ட கருத்தரங்கில் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் நகரப்பொறியாளர்(பொறுப்பு) ஆகியோர் கலந்து கொள்வதற்கு ஏற்படும் செலவினத் தொகை IDC Component of TNUDP – III நிதியிலிருந்து மீளப் பெறப்படும்.**

**மாமன்றத்தீர்மானம் எண்.257**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**3) ந.பொ.1./17333/12**

ஒருங்கிணைந்த மதுரை மாநகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 15 இலட்சம் ஆகும். இந்த மக்கள் தொகை 30 வருடங்களில் 30 இலட்சமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மதுரை மாநகராட்சியின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக 1500 மில்லியன் கனஅடி நீர் வைகை அணையில் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நீரை வைகை குடிநீர் திட்டங்களின் மூலம் குழாய் மூலம் எடுக்கப்பட்டு தினந்தோறும் முதல் வைகை குடிநீர் திட்டத்தின் வழியே 68 மில்லியன் லிட்டர் குடிநீரும், இரண்டாவது குடிநீர் திட்டத்தின் வழியே 47 மில்லியன் லிட்டர் குடிநீரும் ஆக மொத்தம் 115 மில்லியன் லிட்டர் குடிநீர் நாளொன்றிற்கு வழங்கப்படுகிறது.

மேற்கண்ட இரண்டு திட்டங்களும் மதுரை மாநகராட்சியின் பழைய வார்டுகளுக்கு குடிநீர் வழங்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான, திருப்பரங்குன்றம், திருநகர், ஹார்விபட்டி, மற்றும் விளாங்குடி, ஆனையூர் பகுதிகள் வைகை ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டவைகளாகவும் மற்றவை, உள்ளூர் கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளை நீர் ஆதாரங்களாக கொண்டவைகளாகவும் உள்ளன. மேற்கண்ட திட்டங்களில் வைகை அணையினை நீர் ஆதாரமாக கொண்ட வைகை குடிநீர் திட்டங்களை தவிர பிற திட்டங்கள் வைகை ஆற்றுப்படுகைகளை ஆதாரமாக கொண்டதாக உள்ளது. இவை வறண்ட காலங்களில் நம்பகத்தன்மையற்றவைகளாகவே விளங்குகின்றன. இந்நிலையில் தற்போது இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் சீராக வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு, வைகை அணையிலிருந்து கூடுதல் ஒதுக்கீடு செய்வது அவசியமாகிறது. ஏற்கனவே இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தின் இயல்பு நீர்குழாய் 21 மில்லியன் லிட்டர் குடிநீர் நாளொன்றுக்கு கூடுதலாக கொண்டு வருமாறு அமைக்கப்பட்டுள்ளது. அதாவது 400 மில்லியன் கனஅடி நீர் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக எடுக்கப்படுமாறு அமைக்கப்பட்டுள்ளது. எனவே வைகை அணையில் கூடுதலாக 500 மில்லியன் கனஅடி நீர் (குடிநீர் இழப்புகளையும் சேர்த்து) ஒதுக்கப்படும் பட்சத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள குடிநீர் அமைப்புகளை பயன்படுத்தி தற்போது இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும் சீரான குடிநீர் கோடை காலத்திலும் வழங்குமாறு திட்டத்தை குறைவான மதிப்பீட்டில் செயல்படுத்த இயலும்.

எனவே மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் ஒதுக்கப்பட்ட 1500 மில்லியன் கனஅடி நீர் என்பதனை 2000 மில்லியன் கனஅடி நீர் என உயர்த்தி ஒதுக்கீடு செய்யுமாறு தமிழக அரசின் ஒப்புதலை கோரி கருத்துரு அனுப்புவதற்கு மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.258**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4) H2/026213/12**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டுகளில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு ஒருங்கிணைந்த நல மேம்பாட்டுத் திட்டங்கள், சுகாதார ஊழியர்களுக்கு நேரிடையாக சென்றடையும் வகையிலும், சுகாதார ஊழியர்களின் வாழ்வாதார உரிமைகளை நிலை நாட்டும் பொருட்டு சுகாதார ஊழியர்களின் குழந்தைகளுக்கு அனைவருக்கும் கல்வி என்ற சமநிலை உருவாக்கும் பொருட்டும், மேலும் இம்மாநகராட்சி சார்பாக துப்புரவு ஊழியர்களுக்காக மண்டலத்தில் மாதம் ஒருமுறை மண்டலத்திற்குட்பட்ட துப்புரவு ஊழியர்களின் குடியிருப்பு பகுதிகளில் இலவச மருத்துவ முகாம் ஏற்படுத்தி, இலவச மருத்துவ சிகிச்சை அளித்திடவும், மேலும் நோய் எதிர்ப்பு பற்றி மருத்துவ விழிப்புணர்வு ஏற்படுத்தி துப்புரவு ஊழியர்களின் நலன் காத்திடவும், இம்மாநகராட்சி சார்பாக மேற்கண்ட சுகாதார பணியாளர்களுக்கு நல திட்டங்கள் செய்திட, சுகாதார நல அமைப்பு ஏற்படுத்தி, உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளவும், மாநகராட்சி பொது நல நிதியிலிருந்து ரூ.2,00,000/- (மண்டலத்திற்கு ரூ.50,000/- வீதம்) நிரந்தர முன் வைப்புத் தொகை ஒதுக்கீடு செய்யவும், சுகாதார ஊழியர்களின் ஒருங்கிணைந்த நலன் காத்திடவும், இம்மாநகராட்சி சார்பாக குழு அமைத்து ஊழியர்களின் நலன் காத்திடவும், மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.259**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5) ந.பொ.1/17333/12**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு திட்டம் 2012-13 நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் மூலம் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு திட்டம் 2012-13 நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | ஆரப்பாளையம் மேல்நிலைத் தொட்டி அருகில் உள்ள பழைய நீருந்து குழாய்களை புதுப்பித்தல் | 55.00 |
| 2. | முதலாவது மற்றும் இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இயல்பு நீர் குழாய்களை (60 மீ நீளமுள்ள குழாய்கள்) இணைத்தல் மற்றும் இரண்டு எண்ணம் நீர் அளவிடும் கருவி பொருத்துதல் | 35.00 |
| 3. | கழிப்பிடங்களில் மராமத்து பணிகள் மேற்கொள்தல் (13 எண்ணம்) | 35.00 |
| 4. | புதிய கழிப்பிடங்கள் கட்டுதல் (10 எண்ணம்) | 60.00 |

மேற்படி மதிப்பீட்டு பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்க வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.260**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 27.09.2012**

**இந்தியாவில் தமிழகத்தில் பொருளாதார வளர்ச்சியை 7-வது இடத்திற்கு கொண்டு வந்து தமிழகத்தை முன்னேற்று பாதையில் கொண்டு வந்த புரட்சித் தலைவி அம்மாவிற்கு நன்றி அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்து சில்லரை வியபாரிகளின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழித்து வரும் தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசிற்கு கடும் கண்டனம்**

**மதுரை மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்**

மதுரை மாநகராட்சி மாமன்றக் கூட்டம் மதுரை மாநகராட்சியின் மேயர் வி.வி.ராஜன் செல்லப்பா தலைமையில் நடைபெற்றது. இதில் துணைமேயர் ஆர்.கோபாலகிருஷ்ணன், இணை ஆணையாளர் சாம்பவி, மண்டலத் தலைவர்கள் பெ.சாலைமுத்து, எம்.இராஜபாண்டியன், கே.ராஜபாண்டி, கே.ஜெயவேல், நிலைக்குழுத் தலைவர்கள் எஸ்.டி.ஜெயபாலன், முனியாண்டி, ஆர்.கண்ணகி பாஸ்கரன், சரவணன், ஷ.ராஜலிங்கம் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் இம்மாமன்றக் கூட்டத்தில் மதுரை மாநகராட்சி மேயர் வி.வி.ராஜன் செல்லப்பா கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினார்.

**தீர்மானம் 1.**

தமிழக மக்களின் ஒட்டுமொத்த பேராதரவுடன் மாபெறும் வெற்றியை பெற்று மூன்றாவது முறையாக ஆட்சி பொறுப்பேற்ற தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற திமுக ஆட்சியால் சீரழிக்கப்பட்ட தமிழகத்தை மீட்டு ஒரு நாளைக்கு 24 மணி நேரத்திற்கு 20 மணி நேரம் உழைத்து அதன் பயனாக சென்ற திமுக ஆட்சியில் இந்தியாவில் தமிழகம் 17 வது இடத்தில் இருந்த பொருளாதார வளர்ச்சியை இன்று பதினைந்தே மாதங்களில் 7 வது இடத்திற்கு கொண்டுவந்த தமிழகத்தை முன்னேற்றுப் பாதையில் அழைத்துச் சென்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இம்மாமன்றக் கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.248**

**<u>தீர்மானம் 2.</u>**

நாட்டின் பொருளாதாத்தை முடக்கும் வகையில் சில்லறை வணிகத்தில் 51 சதவீதம் அளவிற்கு அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்து பன்னாட்டு வணிக நிறுவனங்களுக்கு கைக்கூலியாக செயல்பட்டு பல கோடி சிறிய வணிகர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழிக்க எடுத்து வரும் மத்திய அரசை இம்மாமன்றக் கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன் இந்த அந்நிய நேரடி முதலீட்டிற்கு மத்திய அரசிற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்து தமிழ்நாட்டில் ஒருபோதும் சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டை ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் என்று கடுமையான குரல் கொடுத்து நடுத்தர சில்லரை வியபாரிகள் வயிற்றில் பாலை வார்த்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இம்மாமன்றக் கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.249</u>**

**<u>தீர்மானம் 3</u>.**

தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய காங்கிரஸ் அரசு வரலாறு காணாத அளவில் டீசல் விலையை 5 ரூபாய் அளவிற்கு உயர்த்தியும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு ஆறு முறை சமையல் எரிவாயுமட்டும் தான் மானிய முறையில் வழங்கப்படும் என கடுமையான கட்டுப்பாட்டை விதித்து ஏழை எளிய பாமர மக்களை தொடர்ந்து வஞ்சிக்கும் மத்திய அரசை கண்டிப்பதுடன் இதற்கு கடுமையான கண்டன குரலை கொடுத்து இந்த விலைவாசி உயர்வு மற்றும் சமையல் எரிவாயு கட்டுப்பாடு ஆகியவற்றை திரும்ப பெறவேண்டும் என்று மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி ஏழை எளிய பாமர மக்களின் பாதுகாவலராக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களை இம்மாமன்றக் கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. என்று மதுரை மாநகராட்சி மேயர் வி.வி.ராஜன் செல்லப்பா தீர்மானங்களை நிறைவேற்றினார்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.250</u>**

**<u>இரங்கல் தீர்மானம்</u>**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.85–ல் மாமன்ற உறுப்பினராக இருந்த திரு.எஸ்.குமார், அவர்கள் கடந்த 20.09.2012ம் தேதி இறந்த செய்தி கேட்டு இம்மாமன்றம் கவலை கொள்கிறது. இவரது பிரிவால் துயறுரும் இவரது குடும்பத்தினருக்கு என் சார்பிலும் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் இம்மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.251</u>**